## மாபெரும் தொலைநோக்காளர் – ‘பாரத ரத்னா’

# எம்.எஸ்.சுவாமிநாதன் அடியொற்றி மாணவர்கள் சமூகப் பணியாற்ற வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஆக. 8 -**

**‘பாரத ரத்னா’ எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் நூற்றாண்டுப் பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

பசுமைப் புரட்சிக்கு வித்திட்டுப் பசியாற்றிய மானுடநோக்கு கொண்ட அறிவியலாளர் ‘பாரத ரத்னா’ எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் நூற்றாண்டுப் பிறந்த நாள் இன்று!

தமது அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களது பெயரிலான ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு நிலம் வழங்கி, குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர்.நாராயணன் அவர்களுடன் இணைந்து, அங்குள்ள JRD Tata சுற்றுச்சூழல் தொழில்நுட்ப மையத்தைத் திறந்தும் வைத்தார் அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அவரது வழியிலான நமது திராவிடமாடல் அரசும், போரூர் Wetland Park, தஞ்சை ஈச்சங்கோட்டை வேளாண் கல்லூரி ஆகியவற்றுக்குத் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களது பெயரைச் சூட்டியுள்ளதோடு,


பயிர்ப் பெருக்கம் மற்றும் மரபியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெறும் மாணவருக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என்றும் அறிவித்து அவரது நினைவைப் போற்றி வருகிறோம்.

Climate Change உட்பட இன்று நாம் எதிர்கொண்டு வரும் பல சவால்களைப் பல பத்தாண்டுகளுக்கு முன்பே கணித்து, எச்சரித்த மாபெரும் தொலைநோக்காளரான எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களை அடியொற்றி, மேலும் பல மாணவர்கள் சமூகத்துக்குப் பணியாற்ற வேண்டும் என அவரது நூற்றாண்டில் கோரிக்கையாக முன்வைக்கிறேன்!

தந்தையின் பணியையும் புகழையும் போற்றும் திருமிகு. சவுமியா சுவாமிநாதன் அவர்களது பணி சிறக்கவும் வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கி...




## முதியோர் – மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று

# ரேசன் பொருட்கள் விநியோகம் செய்யும் ‘முதலமைச்சரின் தாயுமானவர்’ திட்டம்!

## ஆக.12–இல் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, ஆக.8-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை“ சென்னையில் வருகிற 12.8.2025 அன்று தொடங்கி வைக்கிறார்.**

அரசு வழங்கும் பல்வேறு சேவைகளை மக்களின் வீடுதேடிச் சென்றடையச் செய்யும் தமிழ்நாடு அரசின் உயரிய எண்ணத்தின் அடுத்த கட்டமாக, மாநிலத்தில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் “முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்” முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 12.8.2025 அன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட உள்ளது.

மக்கள் நலன்சார்ந்த இத்திட்டம் சிறப்புக் கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும். இத்திட்டத்தின்வாயிலாக 34,809 நியாயவிலைக் கடைகளைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களைக் கொண்ட 15,81,364 குடும்ப அட்டைகளில் உள்ள 20,42,657 பயனாளர்களும், 91,969 குடும்ப அட்டைகளில் உள்ள 1,27,797 மாற்றுத்திறனாளிகளும், ஆக மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகளில் உள்ள 21,70,454 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களிலேயே குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுள்ள குடும்ப அட்டைகள் மற்றும் பயனாளர்களின் விவரம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையிடமிருந்து பெறப்பட்டு, கள அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மின்னணு எடைத்தராசு, EPoS இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களுடன் மூடிய வாகனங்களில் குடிமைப் பொருட்களைப் பாதுகாப்பாகத் தகுதியுள்ள பயனாளர்களின் இல்லத்திற்கேசென்று நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் விநியோகிப்பர்.

70 வயதுக்கு மேல் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீட்டிற்கே சென்று குடிமைப் பொருட்கள் வழங்குவதால் அரசுக்கு ரூ.30.16 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ள மக்கள் நலன் சார்ந்த இத்திட்டம், நலிவுற்ற பிரிவினரின் வாழ்வாதாரத்தை சிறப்புறச் செய்வதுடன் அவர்தம் உணவுப் பாதுகாப்பையும் உறுதிசெய்யும்.

முதலமைச்சர் அவர்கள் 12.8.2025 அன்று இத்திட்டத்தை சென்னையில் தொடங்கிவைக்கும் வேளையில், மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

## கள்ளக்குறிச்சி – உளுந்தூர்பேட்டை கீழ் புத்தமங்கலம் கிராமத்தில்

# கோவில் திருவிழாவின் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஆக 8-**

**கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், கீழ் புத்த மங்கலம் கிராமத்தில் கோவில் திருவிழாவின்போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், கீழ் புத்தமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு.செந்தில்குமார் (வயது 36) த/பெ.ராஜாங்கம் என்பவர் நேற்று (06.08.2025) அதிகாலை சுமார் 12.30 மணியளவில் மேற்படி கிராமத்தில் நடைபெற்ற முத்துமாரியம்மன் கோவில் திருவிழா சாமி ஊர்வலத்தின்போது சகடையிலிருந்த குடை மின்கம்பியில் பட்டு அறுந்து கீழே விழுந்ததில் எதிர்பாராதவிதமாக கரகம் தூக்கிச் சென்ற மேற்குறிப்பிட்ட திரு.செந்தில்குமார் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு புதுடெல்லி அண்ணா கலைஞர் அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழக துணைப் பொதுச்செயலாளரும் மாநிலங்களவை கழகக் குழுத் தலைவருமான திருச்சி சிவா தலைமையில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

## தேர்தல் ஆணையத்துடன் இணைந்து பா.ஜ.க. வாக்குகளைத் திருடுகிறது!

# ஒவ்வொரு தொகுதியிலும் போலி வாக்காளர்கள் ஆயிரக்கணக்கில் சேர்ப்பு!

## மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக.8

புதுடெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் முன்னாள் தலைவருமான ராகுல் காந்தி நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது பீகார் வாக்காளர் தீவிர திருத்த பட்டியல் விவகாரம் குறித்து பேசினார். அதில், “சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் ஜனநாயகத்திற்கு எதிரானது. பீகார் வாக்காளர் பட்டியலில் முறைகேடு உள்ளது. தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பு வேறு மாதிரி இருந்தாலும், தேர்தல் முடிவு பாஜகவிற்கு சாதகமாக உள்ளது. புல்வாமா தாக்குதல், சிந்தூர் நடவடிக்கை போன்ற பல காரணங்கள் கருத்துக்கணிப்பு மாற்றத்துக்கு காரணம். தேர்தலுக்கு முன், பின் கருத்துக்கணிப்பு, உண்மையான தேர்தல் முடிவு ஆகியவை ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன என்று தெரிவித்தார்.



தொடர்ந்து திடீரென பீகார் வாக்காளர் பட்டியலில் சிறப்பு திருத்தம் செய்வது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மராட்டியத்தில் 5 மாதங்களில் ஏராளமான வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். மராட்டியத்தில் 5 ஆண்டில் சேர்க்கப்பட்டதை விட 5 மாதங்களில் ஏராளமான வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். மராட்டியத்தில் கடைசி நேரத்தில் அதிக வாக்குகள் பதிவானதாக ஆணையம் சொல்கிறது. வாக்குப்பதிவு முடியும் கடைசி நேரத்தில் எந்த வாக்குச்சாவடிகளிலும் அதிகம் கூட்டம் இல்லை. வாக்குச் சாவடிகளில் பொருத்தப்பட்ட சிசிடிவிகளை கேட்டபோது ஆணையம் தர மறுத்துவிட்டது. பல தொகுதிகளில் பதிவான வாக்குகளுக்கும் எண்ணப்பட்ட வாக்குகளுக்கும் இடையே முரண்பாடு உள்ளது என்றும் அவர் கூறினார்.

“பாஜகவுக்கு சாதகமாக ஒவ்வொரு தொகுதிகளிலும் குறிப்பிட்ட அளவில் போலி வாக்காளர்கள் சேர்க்கப்படுகின்றனர். தேர்தல் ஆணையத்துடன் இணைந்து பாஜக வாக்குகளை திருடுகிறது. மென்பொருள் மூலம் ஆய்வு செய்யக்கூடிய வகையில் வாக்காளர் பட்டியலை வழங்க தேர்தல் ஆணையம் மறுக்கிறது. ஒரு நபருக்கு பல மாநிலங்களில் வாக்கு உள்ளது. கர்நாடகாவின் மஹாதேவபுரா பகுதியில் கிட்டத்தட்ட 12,000 போலி வாக்குகள் பதிவாகியுள்ளன. வாக்காளர் பட்டியல் விவரங்களை நாங்கள் ஆய்வு செய்யக் கூடாது என தேர்தல் ஆணையம் கருதுகிறது.”

இவ்வாறு அவர் கூறினார்.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளில் காஞ்சிபுரம் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் ஒன்றிய கழக செயலாளர் பி.எம்.குமார் தலைமையில் கோனேரிக்குப்பம் மற்றும் திருப்புட்குழி ஊராட்சிகளில் தூய்மை பணியாளர்களுக்கு நல உதவிகள் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. ஆகியோர் வழங்கினர். உடன் ஒன்றிய பெருந்தலைவர் மலர்கொடிகுமார், ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.